Registered as a News Paper   பக்கங்கள் 06   விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM   Peoples   மக்கள் தினசரி

நாதம் 02   திருவள்ளுவர் ஆண்டு 2022   புரட்டாதி 29   (15 - 10 - 1991)   செவ்வாய்க்கிழமை   ஓசை 239

## எரிபொருள் தாங்கிக்கு இராணுவம் சீலிட்டது

இலங்கை செஞ்சிலுவைச் சமகத்தின் யாழ். கிளையின் வாகனங்களின் நடமாட்டத்தை வட பகுதியில் மட்டுப்படுத்து முகமாக இக்கிளைக்குரிய சகல வாகனங்களின் டீசல் தாங்கியின் மூடிகளின் மீது சிறிலங்கா இராணுவத்தினர் முத்திரையிட்டுள்ளனர் கடந்த 12 ஆம் திகதி வவுனியா தாண்டிக்குளம் இராணுவ சோதனை முகாம் ஊடாக யாழ்ப் (6ம் பக்கம் பார்க்க)

# பேச்சு ஆரம்பிக்க போர் நிறுத்தம்; பொருளாதாரத் தடை நீக்கம்

## சர்வதேச சமாதான குழுவிடம் புலிகள் வற்புறுத்து

(யாழ்ப்பாணம்)

நல்லெண்ணத்தின் அடிப்படையில் உருப்படியான அரசியல் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாயின் முதற்கட்டமாக போர் நிறுத்தம் செய்துகொள்ளப்படவேண்டும். அத்துடன் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள் நீக்கப்பட்டு சகஜ நிலை உருவாக்கப்பட வேண்டும்.

தற்சமயம் சமரச முயற்சி ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருக்கும் சர்வதேச அமைப்பான 'குவேக்கர்ஸ்' சமாதானக் குழுவினரிடம் மேற்கண்ட நிலைப்பாட்டை விடுதலைப் புலிகள் இயக்கம் வற்புறுத்தியதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

தொடர்ந்தும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு, தமிழர் தாயகப் பிரதேசங்களைக் கைப்பற்றி, இராணுவ மேலாதிக்க நிலையில் நின்றுகொண்டு பேச்சுக்களை நடத்த சிங்கள அரசு முற்படுமேயானால் பேச்சுக்கள் நடைபெறும் சூழ்நிலை உருவாகாது எனவும் இத்தூதுக் குழுவிடம் மேலும் வலியுறுத்தப்பட்டதாகத்தெரிகிறது.

ஒரு புறம், இராணுவ நடவடிக்கைகளை தொடர்ந்து கொண்டு, மறுபுறம் தமிழ் மக்கள்மீது தாங்கொணாப் பொருளாதாரச் சுமையை ஏற்படுத்தி, இரு முனைகளில் அழுத்தங்களை திணித்துக் கொண்டு பேச்சுக்களை நடத்துவது உகந்த அணுகுமுறை அல்ல என்பதும் இந்த தூதுக் குழுவினரிடம் சுட்டிக் காட்டப்பட்டதாகவும் தெரியவருகிறது.

"தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வையும் நிரந்தர சமாதானத்தையும் வற்புறுத்தும் மேற்குலகம், குறிப்பாக அமெரிக்கா, சிங்கள அரசுக்கு தொடர்ந்து அளித்துவரும் பெருந்தொகையான நிதியுதவி அரசாங்கத்தை இராணுவ வழிமுறையை தொடர்வதற்கு ஊக்கமளித்து வருகின்றது. இது அரசியல் தீர்வுக்கு முட்டுக்கட்டையாக அமைகிறது. இதனை மேற்குலகம் புரிந்து கொள்ளவேண்டும்" இவ்வாறு 'குவேக்கர்ஸ்' சமாதானக் குழுவிடம் எடுத்துக் கூறப்பட்டதாகவும் தெரியவருகிறது.

## இடம்பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் பிரிவு

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் தமது சொந்த இடங்களைவிட்டு இடம் பெயர்ந்துள்ள தீவக மக்களின் நலன்களைக் கவனிப்பதற்காக நலன்காக்கும் பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட விசேட தளபதி திரு. தமிழ்ச்செல்வன் அறிவித்துள்ளார்.

தற்பொழுது தீவகத்தில் ஏற்பட்டுவரும் சிறிலங்கா இராணுவத்தினரின் குவிப்பைத் தொடர்ந்து புங்குடுதீவு, வேலணை உட்பட ஏனைய (6 ஆம் பக்கம் பார்க்க)

## தென்னிலங்கையில் பிரசார யுத்தம்

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவும் இவருக்கு எதிரான லலித் அத்துலத்முதலி தலைமையிலான அதிருப்தியாளர் குழுவினரும் பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவர் எதிரான பிரசார நடவடிக்கைகளை நாடளாவியரீதியில் நடாத்தப் போவதாக அறிவித்துள்ளனர். இதற்காக இவ்விரு தரப்பினரும் நாடு முழுவதும் பிரசாரக் கூட்டங்களை நடாத்தவிருக்கின்றனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தீர்க்கப்படாத பிரச்சினைகள் கொழும்புடன் தொடர்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நடமாடும் செயலகத்தினால் இதுவரை தீர்வு காணப்படாத மக்களின் ஏராளமான பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகாணும் முகமாக செயலக அதிகாரிகள் கொழும்பு மேலிடத்துடன் தொடர்பு கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை அல்வாய் பகுதிக்கு யாழ் நடமாடும் செயலகம் சென்றதும் அங்கு மக்களின் தேவைகளை அறிந்து கொண்டதும் தெரிந் (6 ஆம் பக்கம் பார்க்க)

### முல்லைத்தீவு மாவட்டத்தில்

## குடியிருப்புக்கள் மீது விமானக் குண்டு வீச்சு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் சிறிலங்கா விமானப்படையினரின் குண்டு வீச்சு விமானங்கள் பொதுமக்களின் குடியிருப்புக்கள் மீது குண்டு வீச்சுத்தாக்குதல்களை நடாத்தியிருக்கின்றன.

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் மோதல்; இராணுவம் பின்வாங்கியது

ஆனையிறவு இராணுவமுகாமின் கடுக்காய்வெட்டைப் பக்கம் உள்ள காவலரணிலிருந்து முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலை அடுத்து இராணுவத்தினர் இழப்புக்களுடன் பின்வாங்கிச் சென்றுள்ளனர்.

நேற்று நண்பகல் நடைபெற்ற இச்சம்பவத்தின்போது இராணுவத்தினருக்கேற்பட்ட இழப்புக்கள் பற்றிய தகவல்களைப் பெறமுடியவில்லை.

## ஜேர்மனியில் அகதிகள் மீது தொடர்ந்தும் தாக்குதல்

(பேர்ன்)

ஜேர்மனியில் வெளிநாட்டவர் மீது தொடர்ந்து நடத்தும் தாக்குதலில் நேற்றுமுன்தினம் ஒன்பது பேர் காயமுற்றுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புகலிடம் தேடுவோர், மற்றும் அகதிகளின் இல்லங்கள் மீது தீக்குண்டுகளை வீசியும் கற்களை எறிந்தும் கலகக்காரர்கள் தாக்குதலை தீவிரப்படுத்தி வருகின்றனர் என ஜேர்மனியப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

ஜேர்மனியில் குறைவாக உள்ள வீடுகளையும், வேலை வாய்ப்புக்களையும் வெளிநாட்டவர்கள் எடுத்துக் கொள்வ

### ஒன்பது பேர் காயம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி இராணுவத்தினர் மூவர் காலை இழந்தனர்

(யாழ்ப்பாணம்)

பலாலியில் உள்ள சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் மிதிவெடியில் சிக்கிக்கொண்டதில் மூன்று சிப்பாய்கள் தமது கால்களை இழந்துள்ளனர்.

நேற்றுக் காலையும், நண்பகலும் வளலாய்ப் பக்கமாக இராணுவத்தினர் முன்னேறி வந்த போது விடுதலைப்புலிகளின் மிதிவெடிகளில் சிக்கிக் கொண்டனர். இதில் மூன்று சிப்பாய்கள் தமது கால்களை இழந்ததைத் [illegible] இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றுவிட்டனர்.

## ஜனாதிபதி - இராணுவம் காசோலை மாற்றும் போட்டி

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தினரின் புனர்வாழ்விற்காக அந்நாட்டின் ஜனாதிபதி பிரேமதாசா 50 லட்சம் ரூபாவினை அன்பளிப்புச் செய்துள்ளார்.

ஜனசக்தி நிதியத்திற்கு சிறிலங்கா இராணுவத்தால் வழங்கப்பட்ட 50 இலட்சம் ரூபாவினையே திருப்பி அவர்களின் புனர்வாழ்விற்காக அளித்ததாக அதாவது காயமுற்ற அங்கவீனமான இராணுவத்தினரின் தேவைக்கென திரும் (6ஆம் பக்கம் பார்க்க)

## புனர் நிர்மாண வேலைகள் வடக்கு, கிழக்கில் உடன் நிறுத்தம்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு பகுதிகளின் சகல புனர்நிர்மாண வேலைகளும் உடனடியாக நிறுத்தப்படவிருப்பதுடன் இப்பகுதிகளின் புனர்நிர்மாண வேலைகளுக்குரிய நிதி ஒதுக்கீடுகளும் [illegible] கின்றன.

இம்மாதம் 5 ஆம் திகதி வவுனியா [illegible]

கிழக்குப்பகுதிகளின் புனர்நிர்மாண, புனர்வாழ்வு இணை [illegible] கூட்டத்தில் மேற் [illegible] (6 ஆம் பக்கம் பார்க்க)

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்
(வரையறுக்கப்பட்டது) சுன்னாகம்

## பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு யாழ். மாவட்டத்தில் வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1) பதவி;- வங்கிச் சேவைகள் முகாமையாளர் குறியீட்டு இலக்கம் 111;07

சம்பளத்திட்டம்:- ரூபா $\frac{1105 - 2170}{60x4;\ 75x11}$ இத்துடன் சங்கத்தினால் வழங்கப்படும் சகல அலவன்சுகளும் வழங்கப்படும்.

கல்வித் தகைமை:-

அ) கூட்டுறவுப்பணியாளரின் 8-வது சம்பளத்திட்டத்தில் $\frac{1005 - 1705}{40x5;\ 50x10}$ அத்துறையில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 9-வது சம்பளத்திட்டத்தில் $\frac{905 - 1605}{40x5;\ 50x10}$ அத்துறையில் முகாமை / மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆறு வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது

ஆ) இலங்கை வங்கிச் சேவை நிறுவனத்தின் டிப்ளோமா பரீட்சையில் பகுதி 1இல் சித்தியுடன், வர்த்தக வங்கித் தொழிலில் இரு வருடங்களுக்குக் குறையாத அனுபவமும் அல்லது

இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரி அல்லது அதற்கிணையான தகைமைகளுடன் வர்த்தக வங்கித் தொழிலில் இரு வருடங்களுக்கு குறையாத அனுபவமும் அல்லது

ஈ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர் தரம்) க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் 03 பாடங்களிலான சித்தியுடன் வங்கித்துறையில் மேற்பார்வை மட்டப்பதவியில் ஆறுவருடங்களுக்குக் குறையாத அனுபவமும்.

வயது:- விண்ணப்ப முடிவு திகதியன்று 23 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

பிணை: உரொக்கப்பிணை ரூபா 4420/-
ஆதனப்பிணை ரூபா 15,000/-

2) பதவி:- கிராமிய வங்கி முகாமையாளர் குறியீட்டு இலக்கம் 205;11

சம்பளத்திட்டம்: $\frac{805 - 1260}{25x7;\ 35x8}$ இத்துடன் சங்கத்தினால் வழங்கப்படும் சகல அலவன்சுகளும் வழங்கப்படும்

கல்வித் தகைமை:-

அ) கிராமிய வங்கித்துறையில் 12-வது சம்பளத்திட்டத்தில் ரூபா $\frac{760 - 1185}{25x\ 10;35\ x\ 5}$ இரு வருடங்களுக்குக் குறையாத அனுபவமும் அல்லது அதை ஒத்ததுறையில் 13-வது சம்பளத்திட்டத்தில் ரூபா $\frac{730 - 1055}{20x10;\ 25x5}$ நான்கு வருடங்களுக்கு குறையாத அனுபவமும் அல்லது

ஆ) கிராமிய வங்கிலிகிதர் பதவியில் இருவருடங்களுக்குக் குறையாத அனுபவமும் கூட்டுறவுப் பணியாளர் உயர் தராதரப் பத்திரமும்.

வயது:- விண்ணப்ப முடிவுத் திகதியன்று 23 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

பிணை: உரொக்கப்பிணை ரூபா 4025/-
ஆதனப்பிணை ரூபா 15000/-

விண்ணப்ப முடிவுத் திகதி:- 28-10-91

பொது:- பின்வரும் சான்றிதழ்களின் உண்மைப்பிரதி விண்ணப்பத்துடன் தவறாது இணைக்கப்படல் வேண்டும். இவற்றின் மூலப்பிரதிகள் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
அ) கல்வி ஆ) பிறப்பு இ) வசிப்பிடத்தகைமை
ஈ) இருந்தசான்றிதழ்கள் அண்மையில்பெற்றது.
உ) சங்கப் பணியாளருக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

1) விண்ணப்பங்கள் யாவும் 28-10-91 அன்று பிற்பகல் 4-00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக பொதுமுகாமையாளர், சுன்னாகம் பல நோ. கூ. சங்கம், சுன்னாகம் என்ற முகவரிக்கு நேரில் அல்லது பதிவுத் தபால்மூலம் அனுப்பப்பட வேண்டும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

2) விண்ணப்பப் படிவங்களை ரூபா 5/- செலுத்தி வேலை நாட்களில் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பல நோ. கூ. சங்கம். பொதுமுகாமையாளர்.
சுன்னாகம்.
12 - 10 - 91
(B/3319)



வரி விளம்பரம்

தவறிவிட்டது

அராலி கிழக்கை சேர்ந்த K பாலசிங்கம் என்பவரின் பாஸ்போட், பிளேன் ரிக்கற் என்பன தவறவிடப்பட்டு விட்டன இவற்றை கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். ஒப்படைப்பவர்க்கு சன்மானம் வழங்கப்படும். விளம்பர இல, 117 மே/பா. ஈழநாதம் யாழ்ப்பாணம் (R/1842)


### சீனப் பொறியியலாளர் பாக்கில் கடத்தல்

(கைதராபாத்)

பாகிஸ்தான், இந்து மாகாணத்தில் ஒரு சீனப் பொறியியலாளர் பண்டிட்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். இச்சம்பவம் சென்ற வியாழக்கிழமை சிந்து மாகாண மிர்புகாரின் காட்டுப் பகுதியொன்றில் நடைபெற்றது. இச்சம்பவத்தில் பொறியியலாளரின் மெய்ப் பாதுகாவலர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். மேலும் பிரயாணிகள் வாகனமென்று அவர்களால் மறிக்கப்பட்டு 18 பிரயாணிகளும் கடத்தப்பட்டுள்ளனர் என செய்திகள் தெரிவிக்கின்றன

முன்னரே பண்டிட்களால் கடத்திச் செல்லப்பட்டிருந்த மூன்று சீனப் பொறியியலாளர்கள் 24 நாட்களின்பின் விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


புதிய
உயர் கல்லூரி
NEW College of High Studies

AL 93

கலை, வர்த்தக வகுப்புக்கள்
ஆரம்பம்
19-10 91
(7 மணி)
நிர்வாகி
S. அருள்நங்கை
(B/ 3328)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகளுக்கான விரிவுரைகள்
கலைமுதற்தேர்வு (G. A. Q)
வர்த்தகமுதற் தேர்வு (FIRST IN COMMERCE)
மேற்படி பட்டப்பாடநெறிகளுக்கான விரிவுரைகள் யாவும் 20-10-91 ஞாயிறு பி.ப. 2மணிக்கு ஆரம்பமாகின்றன.
உதவிப் பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(B/3331)



நாவரவியல்
ஐங்கரநேசன்
யூனிவேர்சல்
கந்தர்மடம் —— யாழ்ப்பாணம்


## நினைவு கூருகின்றோம்

1991 - 10 - 15



ரசி

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் பெரியபண்டிவிரிச்சானில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய

நாயுடு (மரியாம்பிள்ளை பத்திநாதன் - சின்னப்பண்டிவிரிச்சான்)

தமிழீழ கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலினால் வீரமரணமெய்திய

கார்த்திக் (குஞ்சுத்தம்பி சுந்தரலிங்கம் - ஆரையம்பதி 3)

அலிப்/கேசவன் (மூத்ததம்பி உதயகுமார் - ஆரையம்பதி 3)

சுவீந்திரன் (இராமநாதன் சந்திரகுமார் - தாண்டவன்வெளி, மட்டக்களப்பு)

பேதுரு (சுவாமிநாதன் எட்வேட் - காசிவீதி, மட்டக்களப்பு)

மித்திரன் (வாமதேவன் அகிலன் - மட்டக்களப்பு)

மாப்பிள்ளை

சந்திரன்

1987 ஆம் ஆண்டு வீரமரணமெய்திய

ஜேம்ஸ் (இ. பாபுகோணேசன் - சாவகச்சேரி)

சடா (சதாசிவம் சிவகுமார்)

சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய

லெப். மாத்தையா (விமல்தாசன்-மட்டக்களப்பு)

கோப்பாயில் இந்தியப் படையினரின் எறிகணைத் தாக்குதலினால் வீரமரணமெய்திய

மூத்து (மணையகம்)

யாழ். கோட்டைப் பகுதியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

முகமது/மருத்தீன் (சந்தியோகு மருத்தீன் - மன்னார்)

தெல்லிப்பளையில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய

சிலன் (நவரத்தினம் விஜயகுமார் - தெல்லிப்பளை)

கல்லுண்டாய் வெளியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

ஜான் (நாகநாதன் ராஜாரவி - கைதடி)

மட்டக்களப்பில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஒரு குழந்தை, ஒரு பெண்

1988 ஆம் ஆண்டு நவாலியில் இந்தியப் படையினரின் சுற்றி வளைப்பின் போது வீரமரணமெய்திய

ரசி (கந்தசாமி ரதிதரன் - சுதுமலை வடக்கு)

கோண்டாவிலில் இந்தியப் படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் வீரமரணமெய்திய

ரவி (முத்து தவச்செல்வன் - சுதுமலை வடக்கு)

1990 ஆம் ஆண்டு உழவு இயந்திரத்தில் பயணம் செய்கையில் ஏற்பட்ட விபத்தினால் எமைப் பிரிந்த

நியாந்தன் (செட்டிகுளம்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/3326)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

வீர ஜனனம் 18 — 12 — 1973



வீர மரணம் 17 — 07 — 1991

### 2ஆம் லெப்டினனட் குமுதன்
### [வைத்திலிங்கம் தயாளன்]

(ஆனையிறவு நேரடி மோதலில் வீரமரணம்)

மண்ணினை நேசித்த மைந்தனே - உன்
மனவெழுச்சி காதுகளில் கேட்கிறது
விண்ணதிரும் வெடிகள் விசையியக்கி - பெரு
வீரமுடன் போரிட்டாய் எம் குமுதா!
கண்ணனைய சுதந்திரத்தை பெற்றிடுதல் - எம்
கடமையெனக் கூறிடுவாய் தர்மவீரா
எண்ணத்தில் நிழல ும் தோற்றம் - என்றும்
எம்மோடு உறவாடும் உன்னாத்மா

உன் ஆத்மா சாந்தியடையபிரார்த்திக்கும்
அப்பா, அம்மா, அக்கா,
அண்ணா, அம்மம்மா, அம்மப்பா,
மாமா, மாமி, சித்தப்பா, சித்தி
மற்றும் குடும்பத்தினர்

15-10-91 காலை 11 மணியளவில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய கிரியையில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி

வைத்திலிங்கம்
குடும்பத்தினர்

(R/1835)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

வீர ஜனனம் 03 - 05 - 1976



வீர மரணம் 15 - 09 - 1991

### வீரவேங்கை ஜெகன்
### [ஜெயநாதன் ஜெறோம்]

''வீரமும் துணிவும் உனக்கு பூரண வாழ்வை அளித்தன உனது அரசியல் முதிர்ச்சியும், கடமையுணர்வும், போராட்டச் சூழலும் உன்னை பதினைந்தில் மாவீரனாக்கின''

மணலாறு மாவட்டத்தில் 15 09.1991 இல் நடைபெற்ற நேரடி மோதலில் தீரமுடன் போராடி வீரமரணத்தை தழுவிக் கொண்டார். இவருடன் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட ஏனைய போராளிகளுக்கும் எமது வீர அஞ்சலிகள்.

எமக்கு அனுதாபம் தெரிவித்த சகபோராளிகள் உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், யா/நாவாந்துறை றோ க பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், யாழ் மாநகர முன்னைநாள் ஆணையாளர், யாழ் மாநகரசபை ஆணையாளர், ஊழியர்கள், சம்பத்திரிசியார் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் குருக்கள், கன்னியர் ஆகியோருக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

உனது பிரிவால் துயருறும்
அன்பு அம்மா, அப்பா, அண்ணா

இல.25, மடம் வீதி
யாழ்ப்பாணம்

(B/3246)

---

யாழ் ஸ்ரீதர் திரையரங்கில்

## மாங்குளம் தகர்ப்பு
(விவரணப் படம்)

## இனியொரு விதி
(குறும்படம்)

ஆகியன அரங்கம் நிறைந்த காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றன.

தினசரி ஒரு காட்சியும் (4 மணிக்கும்) சனி, ஞாயிறுகளில் இரண்டு காட்சிகளும் (4, 6 மணிக்கும்) காண்பிக்கப்படும்.

(B/3203)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பு
1.8.1946

அரக்கர் அழிப்பு
14.10.1988



செல்வன்
குழந்தைவேலு
பிரமானந்தம்
(மாமணி)

### ''தியாக தீபம் எரிகின்றது''

வந்தவர்க்கு இலையும் வாராதவர்க்கு [உலையும்
வைத்தவர்கள் சந்ததியில் வந்த மாமணிதன்
தாய் நாட்டைநேசித்த தமிழ்ஈழ மறவனவன்
தாய் விலங்கை ஒடிக்க வந்த தேசபக்த வீரனவன்
தாய் நாட்டு வீரருக்குத் துணைநின்றான் சிறை
சென்றான்
தாயகத்தில் எதிரிகளின் தன்னலத்தால் உயிர்
நீத்தான்!
வல்வை மணற்பரப்பில் வண்ணநடை பயின்றவனை
வல்லூறுக் கூட்டத்தார் இணுவையிலே
கொன்றதை
வரலாறு கூறுமடா! வாய் திறந்து பேசுமடா!
வள்ளலே நீ மீண்டும் பிறப்பெடுத்து வந்திடடா!
பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போனதுவோ
[ஈராண்டு!
மையால் எழுதாத மணிக்கவிதை ஆனவனே
ஐயா மாமணியே! அன்பின் பிறப்பிடமே!
மெய்யாய்க் கூறுகின்றோம் மேவுதுயர் தீரவில்லை

கந்தசுவாமி கோயிலடி,
இணுவில் மேற்கு

தம்பிமார்

(R/1838)

---

## அமேதி இடைத்தேர்தலில் சத்தீஸ்சர்மா

(டில்லி)

அமேதி லோக்சபா இடைத் தேர்தலில் கப்டன் சத்தீஸ் சர்மாவை இந்திரா காங்கிரஸ் சார்பாக நிறுத்துவது என அக்கட்சி தீர்மானித்துள்ளது.

அமேதி இடைத்தேர்தலில் போட்டியிட திருமதி சோனியா காந்தி மறுத்ததைத் தொடர்ந்தே கப்டன் சத்தீஸ்சர்மாவை நிறுத்த இந்திரா காங்கிரஸ் பாராளுமன்றக் குழு தீர்மானித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கோழி திருட்டு

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்த திருடர்கள் கோழிக் கொட்டிலுக்குள் இருந்த பலகோழிகளைதிருடிச் சென்றுள்ளனர். இச்சம்பவம் சென்ற சனிக்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது. (43)

## ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

கேரதீவில் இருந்து யாழ் வந்த பிரயாணிகளினால் தவறவிடப்பட்ட பொருள்கள் முத்திரைச்சந்தி தனியார் போக்குவரத்துப் பிரிவுக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் அவற்றை ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

## 93 A L

★ விஞ்ஞானபாடங்கள் மட்டும்

ஆரம்பம்
19 - 10 - 1991
(சனி காலை 7 மணி)

★ எமது வழமையான ஆசிரியர் குழுவினால்

★ மாணவர்கள் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உங்கள் இடத்தை உறுதி செய்து கொள்ளவும்.

NEW MASTER INSTITUTE
Jaffna

(B-3280)

---

## யாழ். நகரில் கணனிக் கல்வி

() Diploma in Data processing And Computer programming in Basic Language

() dBASE III+ () LOTUS 1-2-3

() WORD PROCESSING

ஆரம்பம் :- 18-10-1991

[திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள்
19-10-1991 சனி, ஞாயிறு வகுப்புக்கள்]

குறிப்பு :- தமிழ் பேசும் மாணவர்களின் கம்பியூட்டர் கல்வியை மேம்படுத்துவது எமது நிறுவனமே

O/L படித்த இருபாலாரும் சேரலாம்

மேலதிக விபரங்களுக்கு :-

**UNIKCO COMPUTER CENTRE**
37, CLOCK TOWER ROAD, JAFFNA.

(B/3321)

எங்களுடன் இணைந்தவர்கள்
உயர்ந்தவர்களே!

# A/L 93

## கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புக்கள்

## ஆரம்பம்: 19-10-91 (சனி)

விலங்கியல்:
திரு. நாகநாதன்

தாவரவியல்:
திரு. ஐங்கரநேசன்

பௌதீகவியல்:
திரு. வர்ணம்

இரசாயனவியல்:
திரு. செல்வா

தூய / பிரயோககணிதம்:
திரு. சந்திரமோகன்

பொருளியல்:
திரு. கலாகரன்

வர்த்தகம்:
திரு. கனகரட்ணம்

கணக்கியல்:
திரு. மரியதாஸ்
திரு. ஸ்ரீ

அளவையியல்:
திரு. சுப்பிரமணியம்

இந்துநாகரீகம்:
திரு. காரை சுந்தரம்பிள்ளை

தமிழ்:
திரு. வைகுந்தநாதன்

புவியியல்:
திரு. முருகையா

அரசியல்:
திரு. சிலன்

வரலாறு:
செல்வி நாகராணி

※ வகுப்புகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டதாகையால் அனுமதி களை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

UNIVERSAL
FOR GOD AND COUNTRY

# யூனிவேர்சல்

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்

※ எமது பரீட்சைப் பகுதியினால் நடாத்துவதென தீர்மானிக்கப்பட்டிருந்த க. பொ. த. சாதாரணதரப் பொதுப் பரீட்சை 2, 3, 5-11-91 ஆகிய திகதிகளில் நடைபெற உள்ளது. பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை 23-10-91 அன்று நிறுவனத்தின் பரீட்சைப் பகுதியில் பெற்றுக்கொள்ளவும்.

※ க. பொ. த. உயர்தரம் 93 பிரிவுகளில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கு மேலதிக கட்டணம் இன்றி க. பொ. த சாதாரணதரப் பரீட்சைக்கான மீட்டல் வகுப்புகள் 19-10-91இல் இருந்து ஆரம்பமாகும். (b/3330)

※ சிந்தனைக்கு ※

எண்ணங்கள் அனைத்தையும் விட
காலங்கள் அதிகம் போதிக்கும்
-பெஞ்சமின் டிஸ்ரேலி

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 15-10-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# பிரேமதாசா என்ன கூறுகின்றார்?

சிறுபான்மையினரின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றி வைக்கப்பட வேண்டும். அந்த மக்கள் தாம் விரும்பும் பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய வாய்ப்பளிக்க வேண்டும். விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழேவைத்து விட்டு ஏனைய கட்சிகளுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட வந்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் தயாராக இருக்கின்றது. இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா புத்தளம் சாஹிராக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மீலாத்துவிழாவில் கலந்துகொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த சில தினங்களுக்கு முன் பனாகொடை இராணுவ வதிவிட முகாமில் பேசிய சிறிலங்கா ஜனாதிபதி வடக்கிலும், கிழக்கிலும் தற்பொழுது நடந்துவரும் அவசியமற்ற யுத்தம் முடிவுக்குவரவேண்டும். இராணுவம் நீண்டகால யுத்தம் ஒன்றில் ஈடுபடுவதை நான் விரும்பவில்லை. இதுவே எனது பிரார்த்தனை எனவும் அவர் தெரிவித்தார்.

சிறிலங்கா ஜனாதிபதியின் இவ் இரு கருத்துக்களையும் ஒப்புநோக்கும்போது தமிழர்களின் உரிமைகளை வழங்காமையினால் இலங்கையில் ஒரு தேவையற்ற யுத்தம் ஒன்று நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது என்பதை அவர் ஏற்றுக் கொள்வதாகவே அமைகின்றது. அவ்வாறானால் தேவையற்ற யுத்தத்தை யார் நடத்துகின்றார்கள்? தமிழர் தமது உரிமைக்காகப் போராடுகின்றார்கள். போரை அவர்கள் விரும்பாவிட்டாலும், அவர்கள் தமது உரிமை பெற அது அவசியமாகிறது. அவ்வாறானால் தேவையற்ற போரை சிறிலங்கா அரசே நடத்துகின்றது. இதனைச் சிறிலங்கா ஜனாதிபதி புரியாமல் இருப்பது தான் ஆச்சரியமாக இருக்கின்றது.

இதேவேளை புலிகள் ஆயுதங்களைக் கீழேபோட்டு விட்டு ஏனைய குழுக்களுடன் தேர்தலில் போட்டியிட முன்வந்தால் மாகாணசபைத் தேர்தலைநடத்த அரசாங்கம் தயார் என்ற அறிவிப்பானது சிறிலங்கா ஜனாதிபதியிடம் உள்ள முக்கியமான முரண்பாட்டை வெளிக்காட்டும் அடுத்த அம்சமாகும்.

அன்று 1977இல் தமிழர்கள் ஆயுதங்கள் இன்றியே தமது கோரிக்கைகளை முன்வைத்து தேர்தலில் நின்றனர். சிறிலங்காவிடம் இருந்து பிரிந்து போவதென மக்கள் முடிவெடுத்தார்கள் அம்முடிவின் பின்னாவது சிறிலங்கா பேரினவாதிகள் தமிழருக்குரிய சிறு உரிமைகளையாவது வழங்கினார்களா? தேர்தல் மூலம் தமிழ் மக்கள் பெற முடியாததையே ஆயுதம்மூலம் பெற முற்பட்டனர். இந்நிலையில் தற்பொழுது ஆயுதத்தை வைத்துவிட்டு தேர்தலுக்குவாருங்கள் என்பது ஒருகேலிக்குரிய பேச்சாகும்.

மாகாணசபைக்கு அதிகாரங்கள் எதையும் வழங்கப்படவில்லை. அதற்கு எப்பொழுதும் பறித்துக்கொள்ளக் கூடிய அற்ப சொற்ப சலுகைகளையே சிங்கள பேரினவாத அரசாங்கம் அளித்துள்ளது. இந்நிலையிலேயே இந்தியாவுடனும், சிறிலங்காவுடனும் தொடர்ந்து புலிகள் மோத வேண்டியிருந்தது. இதனை அன்று ஏற்றுக்கொண்டே இந்திய இராணுவம் இலங்கையில் இருக்கும்போது சிறிலங்கா ஜனாதிபதி புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்நிலையில் தற்பொழுது மாகாணசபைக்கு தேர்தல் நடத்துகிறோம். ஆயுதங்களை கீழே வையுங்கள் என்ற சிறிலங்கா ஜனாதிபதியின் பேச்சு தமிழரின் போராட்டமே தேர்தலை நடத்துவதற்காக நடந்தது போன்றல்லவா வெளிப்படுத்தப்படுகின்றது.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் தமிழரின் பிரச்சினையைத் தீர்க்கத் தவறிவிட்டது. கடந்த காலத்தில் சிங்களத் தலைவர்விட்ட தவறுகளினாலேயே 'பயங்கரவாதம்' வளர்ந்தது எனக் கண்டனம் செய்யும் சிறிலங்கா ஜனாதிபதி மறுபடியும் திரும்பி நின்றுகொண்டு முன்னைய பேரினவாதத் தலைவர்கள் வைத்த தீர்வே இனப்பிரச்சினைக்குத் தீர்வு எனவும். தேர்தல் பிரச்சினைக்குப் பரிகாரம் கண்டுவிடும் என்று பேசுவதும் தானும் அவர்களின் வழியே என்பதை உணர்த்துவதாகவே உள்ளது.

தமிழரை யார் ஆள வேண்டும், எப்படி ஆள வேண்டும் என்பதெல்லாம் தமிழரின் விருப்பத்தைப் பொறுத்தது. அதனைச் சிறிலங்காவோ அன்றி இந்தியாவோ அல்லது வேறு யாரோ தீர்மானிக்கமுடியாது. முதலில் தீர்க்கப்பட வேண்டியது தமிழரின் தேசியப் பிரச்சினை. அதற்கு தமிழரிடம் அபகரித்துக்கொண்டுள்ள உரிமைகளையும், ஆக்கிரமித்துக் கொண்டுள்ள நிலத்தையும் உடன்விடுவிக்க வேண்டியது சிறிலங்காவின் கடமை. இவை நிகழ்ந்தால் தேவையற்ற போர் ஒன்றில் சிறிலங்கா ஈடுபடவேண்டியும் வராது.

# விழுதுகள்

பௌத்த சிங்கள பேரினவாத அரசிற்கெதிராக முதன் முதல் ஆயுதம் ஏந்திப் போராடியவர்கள் என்ற வரலாற்றுப் பெருமையைப் பெற்றவர்கள் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த துறைநீலாவணை மக்களே. 1956ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் திகதியன்று தமிழினத்தை அழிக்க ஆயுதங்களுடன் துறைநீலாவணையை நோக்கி வந்த சிறிலங்கா பொலிசாருக்கும் சிறிலங்காக் குடியேற்றவாசிகளுக்குமெதிராக துப்பாக்கிகளினால் தாக்குதல் தொடுத்தார்கள் அவர்கள். அன்றும் தமிழ் மக்களின் துப்பாக்கிகளுக்குப் பயந்தோடினர். சிங்களப் படையினரும் குடியேற்றவாசிகளும். சிங்களக் குடியேற்றத்தின் அபாயத்தை முதன் முதலில் தமிழ்மக்கள் உணர்ந்து கொண்டது. அம்பாறை மாவட்டத்தில் நடந்த நிகழ்வுகளால் தான். இன்று இம்மாவட்டத்திலிருந்து முப்பத்தியாறு கிராமங்களிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். கொச்சமாக ஆங்காங்கே எஞ்சியிருப்போரும் அகதிகள் நிலையில்தான் வாழ்ந்து வருகின்றனர்.

இப்படியான நிலைமை உள்ள அம்பாறையிலிருந்து அன்ரனி போராளியாக மாறியதில் வியப்பொன்றுமில்லை. நன்கு சவரம் செய்யப்பட்ட முகம். எப்போதும் நேர்த்தியான தோற்றம். இவைதான் அன்ரனியைப் பற்றி எங்கள் பொதுமக்களும் காட்டும் அடையாளம். வேகம்-துணிகரம் இவற்றிற்கு அன்ரனியை உதாரணமாகச் சொல்வர் போராளிகள் இவனது துணிச்சலான நடவடிக்கைகள் தான் இவனை அம்பாறை மாவட்டத் தளபதியாக்கின.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த எந்தப் போராளியிடமும் அன்ரனியைப் பற்றிக் கேட்டால் முதலில் அவர்கள் தருவது கண்ணீர். அவர்கள் ஒவ்வொருவரையும் அவனது மரணம் பாதித்துள்ளது. இன்று அந்தப் போராளிகளை வழிநடத்துவது அன்ரனி அவர்களுக்கு அடிக்கடி கூறும் "தலைவரை நம்புங்கள். போராட்டத்தைக் காப்பாற்றுங்கள்" என்ற வாசகங்களே!

ஒரு தாயைப் போல எவ்வாறு தம்மை அன்ரனி நேசித்தான் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவன் எவ்வாறு நடந்து கொண்டான் என்பதைக் கூறும்போது அவர்கள் குரல் கரகரக்கும். கண்கள் தாரையாக நீர் சொரியும்.

ஒரு சமயம் பத்து நாட்களாக இந்தியப் படையினரின் முற்றுகைக்குள் சிக்கியிருந்தனர் அன்ரனி தலைமையிலான போராளிகள். காட்டிற்குள் முற்றுகை நடைபெற்றுக் கொண்டிருக்கும் சமயம் ஒரு போராளிக்கு பாம்பு கடித்து விட்டது சண்டை செய்யவும் வேண்டும். பாம்பு கடித்தவனை எங்காவது கொண்டு சென்று காப்பாற்றவும் வேண்டும். ஓடிப்போய்ச் சண்டை செய்வது. சண்டை ஓய்ந்ததும் ஓடிவந்து அவனுக்குப் பக்கத்தில் இருந்து அப்போராளியைக் காப்பாற்ற முயற்சிகள் மேற்கொள்வது. இப்படியே தொடர்ந்து போராட்டம் எட்டாம் நாள் அப்போராளி மரணமானான். ஒரு போராளியை - தன்கண்ணெதிரே இறக்கும் நிலை உருவானதை இவனால் சகித்துக்கொள்ள முடியவில்லை

இதைப்போலவேதான் அம்பாறை மாவட்டத்தில் பொது மக்களின் இறப்புக்கள் பற்றிக் கேள்விப்படும் போது அவன் படும் வேதனைகளை கதை கதையாகச் சொல்வர் அப்போராளிகள் அத்துடன் போராளிகள் ஒவ்வொருவரது குடும்ப நிலைமையும் அறிந்து வைத்திருப்பான். அவசியம் ஏற்படும் போது தேவையான உதவிகள் செய்வான். இவ்வளவும் அப்போராளிகளுக்கு தெரியாமலேதான். பின்னர் இவ் விடயம் பற்றிக் கேள்விப்பட்டு தாங்கள் அன்ரனியிடம் கதைக்கப் போகும் போது மக்கள் வேறு இயக்கம் வேறல்ல என்று பொன்னம்மான் ராதா அண்ணர் ஆகியோர்படிப்பித்துள்ளனர். அவர்கள் காட்டிய வழியில் நான் நடந்து செல்கிறேன் புதிதாக நான் ஒன்றும் செய்யவில்லை என்று கூறி அதிலிருந்து நழுவிக் கொள்வான். இவற்றையெல்லாம் இன்று விழிநீர் பனிக்க நினைவு கூருகின்றனர் அவர்கள் தமது குடும்பத்தில் ஒருவனாக அன்ரனியை அம்பாறைமாவட்ட மக்கள் ஏற்றுக் கொண்டிருப்பதற்கு இது போன்ற சம்பவங்கள் தான் காரணம்.

தமிழீழவிடுதலைப் போராட்டத்தில் ட்றக்டர் கணக்கில் ஆயுதங்களைக் கைப்பற்றுவது



மேஜர் அன்ரனி

என்ற அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்தவன் அன்ரனி தான்

இந்தியப் படையினரால் தமக்கு கைக்கூலிகளாக இருப்பதற்கென உருவாக்கப்பட்ட தமிழ்த்தேசிய இராணுவத்தின் மீது அன்ரனியின் தலைமையில் தொடுக்கப்பட்ட தாக்குதலே ஒரே இரவில் இயக்கத்தின் ஆயுத பலத்தைக் கூட்டியது அத்தாக்குதல் இந்திய அரசின் திட்டங்களை தவிடு பொடியாக்கியது. பொத்துவில் தொடங்கி யாழ். கோட்டை வரை அன்ரனியின் தாக்குதல்கள் - போராட்டங்களின் புகழ் இடம் பெற்றுள்ளன. அன்ரனியின் தாக்குதல்கள் பற்றிக் கூறுவதானால் அதற்கு தனி நூலே வெளியிட வேண்டும்.

கெரில்லாப் போராட்டத்திற்கு சற்றேனும் சாதகமில்லாத புவியியல் அமைவிடத்தைக் கொண்ட அம்பாறை மாவட்டத்தில் தொடர்ச்சியாக நிகழ்ந்த தாக்குதல்கள் அன்ரனியின் ஆற்றலுக்கு உரைகல்லாக அமைகின்றன.

இந்திய இராணுவமும் இவனால் பாரிய இழப்பைச் சந்தித்தது. இவனைப் பிடிக்க பெருமளவு பெரிய திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கும் சமயம் இவன் முகாமில் போராளிகளுடன் உடற்பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருப்பான். அன்ரனியின் குறாப் என்றால் தனித்து இனம் காட்டக் கூடியவர்களாக திறமை மிக்கவர்களாக இவனால் உருவாக்கப்பட்ட போராளிகள் விளங்கினர்.

யாழ்ப்பாண மக்களுக்கு இவனை நன்றாகத்தெரியவந்தது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டை மீறி யாழ் கச்சேரியடிவரைவந்த சிறிலங்கா இராணுவத்தினரை எதிர்த்து தனி ஆளாக நடுவீதியில் நின்று அவர்களைத் திருப்பியனுப்பிய சம்பவம் தான். இவனது தந்தை ஒரு சிங்களவர் பெயர்கனகசூரியா. ஆரம்பத்தில சிங்கள மொழி மூலமே கல்வி கற்றவன். ஆகவே இயல்பாகவே இவனால் சிங்களம் பேச முடியும். எனவே அன்று சிங்கள இராணுவத்தினரை சிங்கள மொழியினாலேயே எச்சரித்து அனுப்பினான்.

9 8 90 அன்று யாழ் கோட்டைப் பகுதியில் சினைத் தயாரிப்பு விமானம் ஒன்றை சேதமாக்கியவனும் இவனே இதை சிறிலங்கா அரசும் ஒப்புக்கொண்டது.

இவ்வளவு திறமை மிக்க- எல்லா ஆயுதங்களையும் இயக்கக்கூடிய - மனிதநேயம் மிக்க இப்போராளியை 19.10,90 அன்று வசாவிளானில் நம் இழந்தோம்.

தன்னுடைய ஒவ்வொரு போராளியின் மரணத்துக்கும் இவன் பதிலடி கொடுக்கத் தவறுவதில்லை. ஒவ்வொரு போராளியின் மரணமும் தமக்கு வரவிருக்கும் ஆபத்தாகவே சிறிலங்கா - இந்தியப்படைகள் உணர்ந்தன.

அந்தவகையில் இவனதுமரணம் நிகழ்ந்த 45ஆம் நாள் 2 12 90 அன்று இவனது நினைவாக அம்பாறை அறுகம் குடாவுக்கும் பாணமைக் குமிடையில் இவனது வரிசுகள் சிறிலங்காப் படையினர் மீது தாக்குதல் தொடுத்தனர். அத்தாக்குதலில் ஒரு அதிகாரி உட்பட ஏழு அதிரடிப் படையினர் மாண்டனர். அத்தாக்குதல் அன்ரனியின் விழுதுகள் இப்போராட்டத்தை தாங்கியுள்ளன என்ற செய்தியை சிறிலங்காப்படையினருக்கு தெரியப்படுத்தியது.

# எதிர்காலச் செயற்பாடு; கொமன் வெல்த் ஆராயும்

சர்வதேச அரங்கில் உருவாகி வரும் சவால்களை சமாளிப்பதற்காக எதிர்காலத்தில் கொமன் வெல்த் நாடுகள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதைப் பற்றியே நாளை நடைபெற உள்ள ஹாரரே உச்சி மகாநாட்டில் விவாதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உச்சி மகாநாட்டில் விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள் பற்றி இன்று நடைபெற இருக்கும் உயர்நிலைக்குழுகூட்டத்தில் அறிவிக்கப்படும் என்றும், உயர் நிலைக்குழுவே உச்சிமகாநாட்டில் பேசவேண்டிய தலைப்புக்களை தேர்ந்தெடுக்கும் என்றும், தெரிவிக்கப்படுகிறது.

# ருமேனிய தூதர் கடத்தலில் பாக். கிற்கும் தொடர்புண்டு - எஸ். பி. சவான்

(சென்னை)

இந்தியாவில் பணி புரிந்து வந்த ருமேனியத்தூதரக அதிகாரியை சீக்கியப்போராளிகள் கடத்தியதில் பாகிஸ்தானுக்கும் தொடர்பு இருப்பதாக இந்திய உள்துறை அமைச்சர் திரு.எஸ் பி. சவான் குற்றம் சாட்டியிருக்கின்றார். எனினும் இத்தூதரக அதிகாரியை மீட்க தாம் இயன்றவரை முயற்சிப்போம் என்றும் அமைச்சர் கூறியிருக்கின்றார்.

# இந்தியக் கடற்படையால் புலிகள் ஊடுருவல் நிறுத்தம்

- இந்திய கடற்படை தளபதி ராம்தாஸ்

(திருப்பதி)

தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் இந்திய கடற்படையின் கப்பல்கள் நிறுத்தப்பட்டதன் மூலம் விடுதலைப் புலிகளின் ஊடுருவல் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாக இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் எல். ராம்தாஸ் தெரிவித்துள்ளார்.

திருப்பதியில் நேற்று முன்தினம் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய ராம்தாஸ் கடற்படையினருக்கு தமிழக அரசு சிறந்த முறையில் ஒத்துழைப்பு அளித்து வருகின்றது என்றும், இப்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவும் தெரிவித்தார்.

அண்மையில் இலங்கைக்கு ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு சென்ற படகு ஒன்று இந்திய கடற்படையினரால் கைப்பற்றப்பட்டதாகவும் ராம்தாஸ் தெரிவித்தார்.

# சில பின்னடைவு ஏற்பட்டிருப்பினும் அறப்போர் தொடரும்

- லலித்

(கொழும்பு)

சில பின்னடைவுகளைச் சந்தித்துள்ள போதிலும் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கு எதிரான தமது அறப்போர் தொடருமென முன்னாள் அமைச்சர் அத்துலத்முதலி கூறியிருக்கிறார்.

மேலும் ஜனாதிபதிக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டு மனுவையோ நாட்டில் பாராளுமன்ற ஆட்சி கொண்டுவரப்பட வேண்டும் என்ற இன்றைய கோரிக்கையையோ தான் விட்டுவிடப் போவதில்லை என்றும், மக்கள் மத்தியில் பேரணிகள், பொதுக் கூட்டங்கள் மூலம் ஆதரவு திரட்டப் போவதாகவும் தெரிவித்தார். மக்கள் இது குறித்துத் தீர்வு வழங்கட்டும் என்று அத்துலத்முதலி கூறியிருக்கிறார்.

## பொருளாதார தடைகளை நீக்க

# அரபு மக்களை உதவுமாறு ஈராக் கோரிக்கை

(பாக்தாத்)

ஈராக்கிற்கு எதிரான தடைகளை நீக்குமாறு ஈராக் அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகளை கேட்டுக்கொண்டிருக்கிறது.

பொருளாதார தடைகள் விதிக்கப்பட்டாலும் ஈராக் மேலும் இருபது ஆண்டுகளுக்கு உயிர்வாழ முடியும் என்று ஈராக்கிய ஜனாதிபதி சதாம் குசைன் பாக்தாத்தில் நடைபெற்ற மாநாட்டில் தெரிவித்தார்.

எனினும் ஈராக்கிற்கு எதிரான பொருளாதார தடைகளை நீக்கிக்கொள்ளவேண்டுமென்று அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகளின் மக்கள் வேண்டுகோள் விடுக்கவேண்டுமென சதாம் குசைன் கேட்டுக் கொண்டார்.

பாக்தாத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டிற்கு சூடான், யேமன் மற்றும் ஜோர்தான் நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

# ஜி-7 நாட்டு அமைச்சர்கள் மொஸ்கோ பயணம்

(பாங்கொக்)

சோவியத் யூனியனின் பொருளாதாரப் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு அந்நாட்டிற்கு உதவியளிக்கும் திட்டம் பற்றி விவாதிக்க ஏழு தொழில் வள நாடுகள் (ஜி-7) தங்களது துணை நிதியமைச்சர்களை மொஸ்கோவிற்கு அனுப்பவுள்ளன.

நேற்று முன் தினம் பாங்கொக்கில் இதனை ஏழு தொழில்வள நாடுகளின் நிதி அமைச்சர்களும் அறிவித்தனர்.

# 'இந்திய-அமெரிக். உறவுகள் மேம்பட்டு வருகின்றன'

- பி. வி. நரசிம்மராவ்

(லண்டன்)

"இந்திய - சோவியத் உறவுகள் வலுவாக இருக்கின்ற போதிலும் இந்திய - அமெரிக்க உறவுகள் மேம்பட்டுவருகின்றன" என்று இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய பத்திரிகை ஒன்றுக்குப் பேட்டியளித்த பி வி நரசிம்மராவ் அமெரிக்காவுடன் தொழில் நுட்ப மாற்றத்தில் கூடுதலான தொடர்புகள் வைத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

# பர்மா எதிர்க்கட்சி தலைவிக்கு நோபல் பரிசு

(ரங்கூன்)

இந்த ஆண்டுக்கான நோபல் சமாதானப் பரிசை பர்மாவின் எதிர்க் கட்சித் தலைவர் திருமதி ஹன் சான் பெறுகிறார்.

நாற்பத்தாறு வயதான இவர் பர்மாவின் ஜனநாயகத்தையும், மனித உரிமையையும் பாதுகாப்பதற்காக அஹிம்சை வழியில் போராடி வருவதாக நோபல் பரிசுக் குழு பாராட்டியுள்ளது.

பர்மா சுதந்திரப்போராட்ட இயக்கத்தின் தலைவர் ஜெனரல் ஹன்கன் புதல்வியான இவர் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

# இலங். வங்கியில் பணமாக ஓய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி பிரதான கிளையில் இன்றுமுதல் ஓய்வூதியம் பணமாக வழங்கப்படும் என அதன் பிரதான முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இவ்ஓய்வூதியம் 17-10-91ஆம் திகதிவரை வழங்கப்படும் எனவும் இந்நாட்களில் காலை 9 மணி முதல் 11 மணி வரையும் ஓய்வூதியர்கள் தமக்குரிய ஓய்வூதியப் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# சாரணர் சேவை வாரம் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சாரணர்களின் சேவை வாரம் வரும் சனிக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதனை உதவி மாவட்ட ஆணையாளர் இ. ராஜ்குமார் அறிவித்துள்ளார்.

எரிபொருள்

பாணம் நோக்கி வந்த மேற்படி கிளைக்குரிய வாகனங்களின் தாங்கிகளுக்கே முத்திரையிடப்பட்டன.

வவுனியாவிலிருந்து நேராக யாழ்ப்பாணம் சென்று மீண்டும் வவுனியா வருவதற்குரிய அளவிலான டீசலே தாங்கியில் கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் டீசல் நிரப்பிக்கொண்டு இதே வாகனங்கள் வந்தசமயம் தாண்டிக்குளம் சோதனை முகாமில் வைத்து இராணுவத்தால் அதிகளவிலால டீசல் சில வாரங்களுக்கு முன்னர் பறிமுதல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (தி)

ஜனாதிபதி

பவும் ஆர். பிரேமதாசா கையளித்துள்ளார்.

அத்துடன் ஜனாதிபதி நிதியில் இருந்தும் காயமுற்ற அங்கவீனமான இராணுவத்தினரின் புனர்வாழ்விற்கென மேலும் 5 லட்சம் ரூபாவினை பிரேமதாசா வழங்கினார்.

# புகையிரதப் பாதை திருத்தப்பட்டது

(கொழும்பு)

சேதமடைந்த ரயில் தண்டவாளங்கள் திருத்தப்பட்டுள்ளன என்றும், வழமைபோல் இன்றிலிருந்து கொழும்பு-வவுனியா ரயில் சேவை நடைபெறும் என்றும், ரயில்வே கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து வவுனியா வந்துகொண்டிருந்த ரயில் பலாங்கொடைக்கு அருகில் தடம்புரண்டு 40 பேர் வரை காயமடைந்தது தெரிந்ததே.

இந்த விபத்துக்கு நாசவேலை காரணமில்லை என்றும் ரயில்வே கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்தார்.

ஜேர்மனியில்

தாக குற்றஞ் சாட்டும் வலதுசாரி இளைஞர்கள் தான் இந்த வேலைகளில் ஈடுபடுவதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

வெளிநாட்டவர்களுக்கு எதிராக இதுவரை 500க்கும் அதிகமான தாக்குதல்கள் நடந்திருப்பதாகவும்,

கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிசம் குலைந்து போயுள்ள நிலையில் ஜேர்மனிக்குள் கிழக்கைரோப்பிய நாடுகள் மற்றும் மூன்றாம் உலக நாடுகளின் அகதிகள் அதிகரித்துள்ளனர் என்றும் அகதிகள் தொடர்பான புள்ளி விபரத்திலிருந்து அறிய முடிகிறது

தென்னிலங்கையில்

அரசுக்கெதிரான அதிருப்தியாளர் குழுவினர் ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும் என்றும், அரசு விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கியதைக் கண்டித்தும் பொதுக் கூட்டங்களில் பிரசாரம் செய்யவிருக்கின்றனர். இவர்களது பொதுக் கூட்டங்கள் வட கிழக்கின் எல்லைப் பகுதிகளிலும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஜனாதிபதி பிரேமதாசாவின் பக்கம் இருக்கும் அரச வெகுசனத் தொடர்பு சாதனங்கள் உட்பட அரச ஆளணி வசதிகளைப் பயன்படுத்தியும் நடைபெற இருக்கும் பொதுக் கூட்டங்களிலும் அதிருப்தியாளருக்கெதிராகவும், கட்சியில் இருந்து மேலும் உறுப்பினர்கள் விலகிச் செல்வதைத் தடுப்பதற்காகவும் தீவிர பிரசாரம் மேற்கொள்ளப்பட இருக்கின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

குடியிருப்புக்கள்

நேற்று நண்பகல் 12-45 மணியளவில் லொவத்தைப் பகுதியில் உள்ள பொது மக்களின் குடியிருப்புக்களை நோக்கி மூன்று குண்டு வீச்சு விமானங்கள் குண்டுத் தாக்குதலை நடத்தின. இதேவேளை தண்டுவான் என்ற இடத்திலும் நேற்று இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் குண்டுத் தாக்குதலைமேற்கொண்டன. இத் தாக்குதலில் இப்பகுதியில் காணப்பட்ட ஆலயம் ஒன்று முற்றாகச் சேதமடைந்துள்ளது.

தீர்க்கப்படாத

ததே.

அங்கு சுமார் 250பிரச்சினைகள் இடைக்கப்பெற்றபோதிலும் 40 வீதமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

தீர்வுகாணமுடியாத பிரச்சினைகளை உடனடியாகத் தீர்த்து வைப்பதற்கு யாழ். அரச அதிபர் அதிக அக்கறை கொண்டுள்ளாராம். (தி)

இடம்பெயர்ந்த

தீவகப் பகுதியிலிருந்தும் இடம் பெயர்ந்துள்ள ஆயிரக்கணக்கான மக்களின் நலன்களைக் கவனிப்பதற்காக உருவாக்கப்பட்ட நலன் காக்கும் பிரிவின் அலுவலகம் ஒன்று கொட்டடியில் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது.

தீவகப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வரும் தீவக மக்களின் வதிவிடப் பிரச்சினையை இப்பிரிவு உடன் கவனிக்கும் என்றும், இவ் அலுவலகத்துடன் மேற்படி பகுதி மக்கள் தொடர்பு கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

புனர்நிர்மாண

படி பகுதிகளுக்கான புனர்நிர்மாண வேலைகளை முற்றாக நிறுத்துவதற்கான இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

வடகிழக்கு பகுதிகளின் சகல மாவட்ட அரசாங்க அதிபர்களும் வடகிழக்கு மாகாண ஆளுனரும் கலந்து கொண்ட மேற்படி கூட்டத்தில் யாழ் மாவட்ட திட்டப் பணிப்பாளர் திரு. பதமநாதனும் கலந்து கொண்டார்.

மேற்படி கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இத்தீர்மானத்தை கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற தேசிய புனர்வாழ்வு புனர்நிர்மாண இணைப்புக்குழுக் கூட்டத்திலும் வரவேற்கப்பட்டதுடன் இதை நடைமுறைப்படுத்துவதற்கும் பூரண அங்கிகாரம் வழங்கப்பட்டது. இக்கூட்டத்தில் புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சின் உயர் அதிகாரிகளும், பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர் இவர்கள் இப்பகுதிகளின் புனர்நிர்மாண வேலைகள் தொடர்பாக கருத்து வெளியிடுகையில் வடகிழக்கு பகுதி முழுவதும் இராணுவத்தினரின் பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டு இப்பகுதிகளில் சிவில் நிர்வாக அமைப்பு ஒழுங்காக செயற்பட ஆரம்பித்த பின்னரே இங்கு புனர்நிர்மாண வேலைகளை மீண்டும் ஆரம்பிக்க முடியும் என்று கூறினார்.

இந்திய - சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் மிக மோசமாகசிதைவுற்றுப்போன வடகிழக்கில் உள்ள பலபுனர்நிர்மாண வேலைத்திட்டங்கள் உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டிய நிலையில் உள்ளது. இவற்றில் அரசதிணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் சபைகள் போன்றவற்றினதும் தனியார் துறையினரதும் அடங்கும். இந்த நிலையில் புனர் நிர்மாண வேலைகளை நிறுத்தும் மேற்படிமுடிவினால் அனைத்து அரச திணைக்களங்களதும் செயற்பாடுகள் கணிசமான அளவில் பாதிப்படையும் நிலை உருவாகியுள்ளதுடன் இப்பகுதி மக்களும் பெரும் சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது. அதே வேளை உலக வங்கியிடம் இருந்தும் உதவிவழங்கும் சர்வதேச நாடுகள் பலவற்றில் இருந்தும் புனர்நிர்மாண வேலைகளுக்கென்று அரசு பெற்றுக்கொள்ளும் பெருமளவிலான நிதி உதவிகளையும் கடன் திட்டங்களையும் கொண்டு நாட்டின் ஏனைய பகுதிகளில் பல புனர்நிர்மாண வேலைகளை அரசு துரிதப்படுத்துவதற்கு திட்டமிட்டிருக்கின்றது என்று தெரியவருகின்றது. (க)


## மரண அறிவித்தல்

### திரு. சவிரிமுத்து சாமிநாதர்

திரு. சவிரிமுத்து சாமிநாதர் (தங்கராசா, ஞானம்விருடியோ) காலமாகி விட்டார். இவர் திரேசம்மாவின் அன்பு மகனும், பிரகாசபுத்திரியின் அன்புக்கணவரும், (பேபிறோஸ்) யோதினி (New Era Publications Ltd) விஜினி (தி. ஞ. கன்னியர்மடம்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ஆனந்தத்தின் அன்பு மருமகனும், அல்பிறட், பிரான்சிஸ், மைக்கல் (யாழ் மாநகரசபை) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் (15 - 10 - 91) இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

19/6, அடப்பன் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்: ச. மைக்கல்

[B/3332]


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் [illegible] வீதி, 61 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.